# குறிஞ்சிக்கலி இலக்கியத்தில் தெய்வ வழிபாட்டு சிந்தனை

# Deity Worship thought in *Kurinjikkali* Literature

***து. முத்துலட்சுமி***
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி
விழுப்புரம், இந்தியா

**T. Muthulakshmi**
*Arignar Anna Government Arts College*
*Villupuram, India*

## *ஆய்வுச் சுருக்கம்*

*மக்களின் மனம் தொடர்பான பிரதிபலிப்பே தெய்வமாகும். தெய்வம் என்பது ஒரு சமூகக் குறியீடு. வேட்டைச் சமூகத்தில் மனிதன் இயற்கையிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள ஏற்படுத்திக் கொண்ட நம்பிக்கையின் வெளிப்பாடே தெய்வம் என்னும் கருத்தாகும். மக்களிடையே தெய்வம் என்ற ஒன்று தோன்றிய பிறகு அதற்கான வழிபாட்டு முறைகளும் தோன்றலாயின. பின் வழிபாட்டு முறைகளும், சடங்கியல் முறைகளும் மக்கள் வாழ்க்கையில் ஒரு முக்கிய அம்சமாக திகழ்ந்தது என்றே கூற வேண்டும். அத்தகைய தெய்வ வழிபாட்டை குறிஞ்சிக்கலி வாயிலாக ஆராயலாம்.*

***ஆய்வு நோக்கம்:***

*குறிஞ்சிக்கலி, வழிபாட்டு முறைகள், வழிபாடு, மானுடவியல், சமூகவியல்.*

## Abstract

*Deity is a reflection of people's minds. Deity is a social symbol. The idea of a deity is an expression of the belief that man has established in a hunting society to protect himself from nature. With the emergence of a deity among the people, the cults of the deity also began to appear. Later worship and ritual practices became an important aspect of the life of the people. Such deity worship can be explored through Kurinjikkali.*

***Keywords:***

*Kurinjikali, Cults, Worship, Anthropology, Sociology.*

**Citation**

Muthulakshmi, T. "Deity Worship thought in *Kurinjikali* Literature." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 4, 2024, pp. 50–56.

**வழிபாடு என்பதன் பொருள்**

*வழிபாடு என்பதற்கு "ஆராதனை வழிபடல்" எனப் பொருள் தருகிறது சதுரகராதி. இறைவழிபாடு, பூசனை, பெருமதிப்பு, மரபு என ஆங்கிலத் தமிழ் அகராதி குறிப்பிடுகிறது. வணக்கம், வழியிற்செல்லுகை, பின்பற்றுகை, வழக்கம், பூசனை, சமயக் கோட்பாடு எனக் கழகத் தமிழ் அகராதி பொருள் தருகிறது.*

**வழிபாட்டின் தோற்றமும் அறிஞர்களின் கருத்துக்களும்**

1. *"இயற்கைத் தோற்றங்களான கதிரவன், மதி, மழை, மின்னல் முதலான பொருள்களைக் கண்டு ஏற்பட்ட வியப்பு, அதிர்ச்சி, அச்சம் என்னும் உள்ளத்து உணர்வுகளே சமயம் மற்றும் வழிபாடு தோன்றக் காரணமாயின்" என்பார் மாக்ஸ்முல்லர்.*
2. *"இயற்கையிடமும், மரணத்திற்குப் பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படையான காரணம்"என்று அறிஞர் சிக்மெண்ட் ஃப்ராய்டு குறிப்பிடுகிறார்.*
3. *"ஆபத்தான தொழிலில் ஈடுபட்டோரும், நோய்வாய்பட்டோரும் தெய்வத்தை வேண்டி நிற்பர்"என்பார் ஆறு. இராமநாதன்.*
4. *"தனக்கு நலன் அளிக்கவும் வல்ல ஆற்றல் தனக்கு அப்பாடல் உள்ளது என்ற நினைவே வழிபாட்டின் தொடக்கம்"என க.பா. அறவாணன் கூறுகிறார்.*

**வழிபாட்டின் வகைகள்**

*வழிபாட்டின் வகைகள் குறித்து பல்வேறு மானுடவியல் அறிஞர்களும் சமூகவியல் அறிஞர்களும் பல நிலைகளில் வகைப்படுத்தி உள்ளனர். அதில் வழிபாடுகள், அருவ வழிபாடு, அருவுருவ வழிபாடு, உருவ வழிபாடு என மூவகைதாம். அருவ வழிபாடு செய்ய இயலாத எவரும் அருவுருவ வழிபாட்டை மேற்கொண்டனர். அவருள்ளும் உருவ வழிபாடு செய்ய விரும்பினவர்கள் ஆறு சமயங்களில் ஒன்றற்குரிய முறையினை பின்பற்றி ஒழுகினர் என்கிறார் கா.சுப்பிரமணியம். வழிபாட்டு நிலைகளை அறிஞர்கள் பலர் பலவிதமான கால நிலைக்கு ஏற்ப பகுத்து ஆராய்ந்து வந்துள்ளனர். அவை நில வழிபாடு, மலை வழிபாடு, மர வழிபாடு, நீர்வழிபாடு, காற்று வழிபாடு, நெருப்பு வழிபாடு ஆகும்.*

**குறிஞ்சிக்கலி தெய்வம்**

*குறிஞ்சிக்கலியின் ஆசிரியர் கபிலர். கபிலர் குறிஞ்சிக்கலி பாடுவதில் வல்லவர். கலித்தொகை ஐந்து திணைகளையும் கொண்டு பாடப்பெற்ற நூல். அவ்வைந்து திணைகளில் ஒன்று குறிஞ்சித்திணை. குறிஞ்சித்திணையின் தெய்வம் முருகன் என்பதனை தொல்காப்பியர்*

***"மாயோன் மேய காடுறை உலகமும்***
***சேயோன் மேய மைவரை உலகமும்" (தொல். பொருள். நூ. 5)***

*என்ற நூற்பா வழி விளக்குகிறார். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி ஆகும்.*

**காலம்**

***குறிஞ்சி, கூதிர், யாமம் என்மனார் புலவர் (தொல். பொ. நூ. 7)***

*குறிஞ்சித் திணைக்கு காலமாக கூதிரும் (ஐப்பசித் திங்களும் கார்த்திகைத் திங்களும்) யாமமும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். யாமம் - இரவின் நடுக்கூறு என்கின்றனர்.*

**குறிஞ்சியின் உரிப்பொருள்**

***"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்***
***ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை***
***தேருங் காலைத் திணைக்குரிய பொருளே" (தொல். பொ. நூ. 16)***

*புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சித் திணைக்குரிய உரிப்பொருளாக தொல்காப்பியத்தில் காட்டப்பட்டுள்ளது.*

**கருப்பொருள்**

***"தெய்வம் உணவே மாமரம் புட்பறை***
***செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ***
***அவ்வகை பிறவும் கருவென மொழிப" (தொல். பொ. நூ. 20)***

*தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறையென்னும் முழக்குக் கருவி, தொழில், பண் முதலியனவும், அத்தன்மைய பிறவும் கருப்பொருள் என்று கூறுகிறார் தொல்காப்பியர்.*

**குறிஞ்சிக்குரிய கருப்பொருள்கள்**

| | | |
|---|---|---|
| *தெய்வம்* | - | *முருகவேள்* |
| *உணவு* | - | *திணையும், ஐவனமும், வெதிர்நெல்லும்* |
| *மா* | - | *யானையும், புலியும், பன்றியும், கரடியும்* |
| *மரம்* | - | *வேங்கையும் கோங்கும்* |
| *புள்* | - | *மயிலும், கிளியும்* |
| *பறை* | - | *வெறியாட்டுப் பறையும், தொண்டகப்பறையும்* |
| *செய்தி* | - | *தேனழித்தல்* |
| *பண்* | - | *குறிஞ்சி* |
| *பூ* | - | *வேங்கைப்புவும், குறிஞ்சிப்புவும்* |
| *நீர்* | - | *சுனைநீரும், அருவி நீரும்* |

*இவையே குறிஞ்சிக்குரிய கருப்பொருள்கள் ஆகும்.*

**முருகப்பெருமான்**

*முருகப்பெருமானை புகழ்ந்து பாடுவது போல் முருகருக்கு உடைய பண்புகள் மற்றும் சிறப்புகளை வைத்து மறைமுகமாக தலைவனைப் பாடுவது போல் குறிஞ்சிக்கலியில் பாடல் வரிகள் இடம் பெற்றுள்ளது.*

***"ஐவன வெண்நெல் அறை உரலுள் பெய்து, இருவாம்,***
***ஐயனை ஏத்துவாம் போல, அணி பெற்ற***
***மைபடு சென்னிப் பயமலை நாடனை***
***தையலாய்! பாடுவாம், நாம்" (குறிஞ்சிக்கலி - 43)***

*ஐவனமாகிய வெண்ணெல்லைப் பாறையாகிய உரலிலே பெய்வோம், யானையின் கொம்பினாலான உலக்கையையும், சந்தன மரத்தினாலான உலக்கையையும் கொள்வோம். நாம் இருவரும் இவ்வுலக்கைகளினால் நெல்லைக் குற்றுவோம். முருகனை புகழ்வது போல அழகுடைய மேகம் தவழ்கின்ற உச்சினை உடைய பயன்தரும் மலைநாட்டை உடையானைப் பாடுவோம் என தலைவியை தோழி அழைப்பதாக இச்செய்யுள் கூறுகிறது.*

***"நுண்பொறி மான்செவி போல, வெதிர்முனைக்***
***கண்பொதி பாளை கழன்று உகும் பண்பிற்றே***
***மாறுகொண்டு ஆற்றார் எனினும், பிறர் குற்றம்***
***கூறுதல் தேற்றாதோன் குன்று'. (குறிஞ்சிக்கலி - 43)***

*நுண்ணிய சிறிய புள்ளிகளை உடைய மானின் செவியினை போல, மூங்கில் முளையினது கண்ணைப் பொதிந்த பாளை கழன்று விழும் பண்பினை உடையது பெருந்தகையாளன் குன்று.*

*களவு வாழ்வில் ஈடுபட்ட தலைவன் தலைவியை திருமணம் செய்ய காலம் கடத்துவதால் தோழி தலைவனை பழத்து பேசுகிறாள். அது தாங்க முடியாத தலைவி தலைவனின் சிறப்பை முருகப்பெருமான் வழி வள்ளைப் பாட்டாக பாடுகிறாள் என்பதனை இப்பாடல் மூலம் உணரமுடிகிறது. இதேபோல் மற்றொருபாடல்*

***"தண்நறுங் கோங்கம் மலர்ந்த வரையெல்லாம்***
***பொன்அணி யானைபோல் தோன்றுமே." (குறிஞ்சிக்கலி - 42)***

*அவன் குன்றாயிருந்தும் பக்க மலைகளின் மேலே கட்டியுள்ள தேன் இறால் மேகத்திடையே நுழைகின்ற மதியைப் போல தோன்றுகிறது என பழித்துக் கூறினாள் தோழி.*

*வள்ளைப்பாட்டினை பாடும்போது உரலில் தானியங்களை போட்டு இடித்துக் கொண்டே பாடல் பாடுவார்கள். அப்போது தலைவியும் தோழியும் பாடுவது ஊர் மக்களுக்கு புரியாத வகையில் இறைவனைப் புகழ்ந்தும், பழித்தும் பாடுவதாக அமைந்துள்ளது.*

*இங்கு அவன் குன்றாயிருந்தும் என்னும் தொடரில் அவன் என்பது முருகனைக் குறித்த சொல்லாக இருந்தும் அது மறைபொருளில் தலைவனைக் குறிக்கிறது.*

*இதுபோல, ஒரு சாதாரண மனிதனை (அ) அரசனை அரசனை கடவுள் நிலைக்கு உயர்த்திப் பாடுவது புவை நிலை என்னும் துறையாகும்.*

**குரவை**

*குறிஞ்சிக்கலி மற்றொரு பாடலில் அறத்தோடு நிற்றல் கூறப்பட்டுள்ளது. அதில் தலைவி-தலைவன் களவொழுக்கத்தில், தலைவியின் தந்தை தனயர் முதலான தமர், திருமணத்திற்கு மறுப்பு கூறிய நிலையில் தோழி அறத்தோடு நிற்க வேண்டிய கட்டாயத்திற்கு உண்டாகிறாள். தலைவியின் களவொழுக்கத்தைச் செவிலித்தாய்க்குக் கூறுகிறாள். செவிலித்தாய் நற்றாக்கு அறத்தோடு நின்று அறிவிக்கிறாள். நற்றாய் தன்னையர் முதலியோர்க்கு அறத்தோடு நிற்கிறாள். இறுதியில் தனயர் திருமணத்திற்கு உடன்பட்டனர். இதனை தோழி தலைவிக்கு கூறினாள். விரைவில் திருமணம் முடிதற்பொருட்டுத் தெய்வத்தைப் பரவினர் குரவை ஆடினர்.*

***"தெரியிழாய் நீயும் நின்கேளும் புணர,***
***வரை உறை தெய்வம் உவப்ப, உவந்து***
***குரவை தழீஇ யாம் ஆட, குரவையுள்***
***கோண்டு நிலை பாடிக்கான்." (குறிஞ்சிக்கலி - 39)***

*இச்செய்யுள் வரிகள் மூலம் குறிஞ்சி நில மக்கள் தங்கள் வேண்டுதல்கள் நிறைவு பெற்றால் முருகனுக்கு குரவை ஆடி மகிழ்ந்துள்ளனர் என தெரிய வந்துள்ளது.*

**வழிபாட்டுமுறை**

***"கொடிச்சியர் கூப்பி வரைதொழு கைபோல்***
***எடுத்த நறவின் குலை அலங் காந்தள்***
***தொடுத்த தேன் சோர, தயங்கும் - தன் உற்றார்***
***இடுக்கன் தவிர்ப்பான் மலை". (குறிஞ்சிக்கலி - 40)***

*தன்னை நாடி வருபவர்களுடைய துன்பங்களை நீக்குபவனுடைய மலை, கொடிச்சியர் தம் குறை தீரும் பொருட்டு கைகள் இரண்டையும் குவித்து, மலையில் உறையும் முருகப் பெருமானை தொழுவது போல, உயர்ந்த நறவினை உடைய கொத்துக்கள் அசையும் காந்தளிடத்தே தேன் ஒழுகும்படியாக அக்காந்தள் அசையா நிற்கும்.*

*காந்தள் என்பது ஒரு வகை மரம். அவை அசையாமல் இருப்பது இயல்பான ஒன்று. ஆனால் கொடிச்சியர் அக்காந்தள் போல் அசையாமல் நின்று முருகனை வணங்குவது என்பது கொடிச்சியர் முருகன் மீது கொண்ட பற்றினை வெளிப்படுத்துகிறது.*

**வெறியாடல்**

*இனிய செய்து அகன்று, நீ இன்னாதாத் துறத்தலின்*
***"பனி, இவள் படர்" எனப் பரவாமை ஒல்லும்மன் -***
***ஊர் அலர் தூற்றலின், ஒளி ஓடி நறுநுதல்***
***பீர் அலர் அணி கொண்டு, பிறைவனப்பு இழிவாக்கால்? (குறிஞ்சிக்கலி -53)***

*தலைவன் ஒருமுறை ஊருக்குச் சென்று வருகிறேன் என்று தோழியிடம் கூறிவிட்டு செல்கிறான். தலைவன் வருவதற்கு காலம் கடத்தப்பட்ட நிலையில் தலைவியின் உடல் மெலிந்து கையில் உள்ள வளையல் தானாக கழன்று விழுகின்றன. தலைவி பிறைநுதல் அழகை இழந்து நிற்கிறாள். இதனைக் கண்ட நற்றாய் தெய்வத்தால் நேர்ந்த நடுக்கம் என்று தெய்வத்தை வழிபட்டனர் என்பது இச்செய்யுள் வரிகள் உணர்த்துகிறது.*

**பிற நூல்களில் முருக வழிபாடு**

*முருகன் என்னும் சொல் "முருகு" என்னும் சொல்லில் இருந்து உருவாக்கப்பட்டது. முருகு என்னும் சொல்லுக்கு அழகு, இளமை, தெய்வம், மணம், வேள்வி என்னும் பண்பு சொல்லல் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் குறிக்கப்படுகிறது. முருகு என்னும் பண்பு சொல்லோடு ஆண்பால் காட்டும் ஆன் விகுதியை இணைத்து (முருகு அன்) முருகன் என்னும் சொல் உருவாக்கப்பட்டது என தெரிய வருகிறது.*

*கலித்தொகை குறிஞ்சிக்கலியில் முருகனின் சிறப்பையும், முருகனை வழிபடும் முறைகளும் கூறப்பட்டவை போலவே சங்க இலக்கிய நூல்களில் இருந்தும் சில பாடல்களை பின்வருமாறு காணலாம்.*

***"சூர்மருங்கு அறுத்த சுடர்இலை நெடுவேள்***
***சினம்மிகு வேந்தன் தன்பரங் குன்றத்து" (அகம், பா. 59)***

*என்னும் பாடல் மூலம் முருகன் போர் செய்வதில் வல்லவன், தோல்வியை அறியாதவன், மிக்கசினம் உடையவன், போரில் பகைவரை அழிப்பவன் என்று அகநானூறு வழி அறிய முடிகிறது.*

***"யா அம் இரப்பவை***
***பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்***
***அருளும் அன்பும் அறனும் மூன்றும்***
***உருளிணர்க் கடம்பின் ஒளதாராயே"! (பரிபாடல், பா - 49)***

*என்னும் பரிபாடல் வழி அறியலாம். முருகப் பெருமானின் அறநெறிக்கண் நின்று அன்பு செலுத்தி அவனருளைப் பெற்று நிலையான பேரின்பத்தை அடைய விரும்புகின்றவர் அன்பு, அருள், அறன் என்னும் மூன்று சிறப்புகளையும் விரும்புவர் என்று கூறுகிறது.*

***"முருக அயர்ந்து வந்த முதுவாய் வேல***
***சினவல் ஓம்புமதி! வினவுவது உடையேன்***
***பல்வேறு உருவில் சில் அவிழ் மடையொடு***
***சிறுமதி கொன்று இவள் நற்றுதல் நீவி***
***விண்தோய் மாமலைச் சிலம்பின்***
***ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே"*** *(குறுந்தொகை, பா. 114)*

*என்னும் பாடல் பல வேறுபட்ட நிறமுள்ள சில சோற்றையுடைய பலியை வைத்துப் படைத்த சிறிய ஆட்டுக்குட்டியைக் கொன்று இத்தலைவியின் நல்ல நெற்றியில் தடவி, முருகக் கடவுளை வணங்கிப் பலியாக முருகனுக்கு ஆடு பலியிடும் வழக்கமும் உண்டென்பதையும் கூறுகிறது.*

**குறிஞ்சிக்கலியில் பிற தெய்வங்கள்**

*குறிஞ்சித்திணை கடவுள் முருகனாக இருப்பினும், சிவன், திருமால், திருமகள் பற்றிய செய்திகள் காணப்படுகிறது.*

**சிவன்**

***"இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்***
***உமை அமர்ந்து"*** *(குறிஞ்சிக்கலி - 38)*

*இமயமலையை வில்லாக வளைத்தவன் கங்கையின் ஈரத்தை உடைத்தாகிய சடையினை உடையவனாகிய இறைவன் சிவபெருமான், இறைவியாகிய உமையம்மையுடன் உயர்ந்த இமய மலையிலே இருந்தனன். அப்போது பத்து தலைகளை உடையவனும், அரக்கர்களின் தலைவனுமாகிய இராவணன், இமய மலையை எடுப்பதற்காக கைகளைக் கீழே செருகி, தொழியழகுபெற்ற தடக்கைகளினால் அம்மலையை எடுக்கலாற்றாது வருந்தினான் என்று இச்செய்யுள் வரிகள் கூறுகிறது.*

**திருமால்**

***"மல்லரை மறம் சாய்த்த மால்போல் தன் கிளை நர்ப்பண்***
***கல் உயர் நனஞ்சாரல், கலந்து இயலும் நாட! கேள்"***

*யானையினது முறம் போன்ற செவியை மறைப்பாக கொண்டு, பாய்ந்து, மாறுபாடு செய்த புலியைச்சினந்து தாக்கியது யானை, மறத்தைத் தன்னிடத்தே கொண்ட நூற்றுவர்க்குத் தலைவனாகிய துரியோதனைத் தொடையிலே அடித்து உயிரைப் போக்கினான் பீமசேனன், அதுபோல தன்னுடைய கூரிய கோட்டினது நுனியாலே குத்தி, புலியினது மருமத்தைத் திறந்து மாறுபாடு தீர்த்தது அழகினை உடைய அவ்யானை. பின்னர் மல்லர்களைக் கொன்று அவர்தம் வீரத்தைத் தொலைத்த திருமாலைப்போல், கல் உயர்ந்த அகன்ற சாரலிடத்தே தன் சுற்றத்திற்கு நடுவே சென்று கலந்தது அந்த யானை என்று கூறுகிறது இச்செய்யுள். மல்லர்களை கொன்றார் திருமால் என்ற செய்தி இப்பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது.*

**திருமகள்**

*“புரிநெகிழ் தாமரை மலர்அம்கண் வீறு எய்தி,*

*திரு நயந்து இருந்தன்ன தேம்கமழ் விறல் வெற்ப்” ! (குறிஞ்சிக்கலி - 44)*

*அழகிய கிளைகளின் மேலே அருவிநீர் வீழ்தலின் முதிர்ந்த கொத்துக் கொண்ட முழவுபோலும்தளிரினைஉடையவேங்கையிடத்தேநெருப்புப்போலும்மலர்கள்மலுந்துள்ளன. இக்காட்சி விரிபர்ந்த மதத்தினை உடைய அழகிய யானைகள் மலரும் நீருமாகக் கலந்து நீரை முகந்து மேலே சொரியா நின்றன. அந்நீர் கீழே விழுவதால் முறுக்கு அவிந்தன. தாமரை மலர்கள், அழகிய தாமரையின் அழகிய அல்லியிடத்தே வீறு செற்றுத் திருமகள் விருப்புடன் குடி கொண்டிருந்ததனை ஒத்திருந்தது. அதற்கு தேன் மணக்கும் வெற்றியினை உடைய வெற்பனே என்கிறாள் தோழி. இச்செய்யுளில் திருமகள் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது.*

**முடிவுரை**

*ஒருபுறம் மனிதனுக்கு இயற்கையின் மேல் உள்ள அச்சம், மற்றொருபுறம் இயற்கை அவர்களுக்கு வழங்கிய கொடை இரண்டையும் உணர்ந்த மனிதன் இயற்கையின்மேல் தனிப்பட்ட பயத்துடன் கலந்த பக்தியைக் கொண்டான் என்றே கூறலாம். மனிதன் தனது குறைகளைத் தீர்த்துக்கொள்ளும் களமாக வழிபாட்டைக் கருதினான். அதற்கு இயற்கைச் சூழலும், நிலவியல் சூழலும் அடித்தளமாக இருந்தது. ஆனால் மனிதன் அவ்வழிபாட்டு முறைகளில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டான். அதன்மேல் முழுமையாக நம்பிக்கை செலுத்தியுள்ளான் என்பது குறிஞ்சிக்கலி மூலம் புலனாகிறது.*

*சங்க இலக்கியத்தில் முருகன் வழிபாடு குறித்தும், சிறப்பாக திருமுருகாற்றுப்படையில் முருக வழிபாடு குறித்த செய்திகளும் அத்தெய்வத்திற்காக எடுக்கப்பட்ட வேலன் வெறியாட்டு குறித்தும் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.*

*குறிஞ்சிக்கலியில் உள்ள பாடல்கள் மூலம் குறிஞ்சித்திணை தெய்வமாகிய முருகப்பெருமான் மீது கொண்ட பற்றும் அவர்கள் தெய்வத்தை வழிபடும் முறைகளையும் இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.*